SELECTIONS FROM THE KURAL

நானூறு குறள்

ONE HUNDRED STANZAS

WITH

FULL EXPLANATIONS

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

MADRAS ALLAHABAD RANGOON COLOMBO

C. L. S. PRESS, MADRAS—1926

நாறு குறள்

1. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

பதவுரை. அகரம், அகாரம்; முதல, முதலாக உடையது; எழுத்து, அட்சரம்; எல்லாம், யாவும்; ஆதிபகவன், முதற் கடவுள்; முதற்று, முதலாக உடையது; உலகு, உலகம்.

பொழிப்புரை. எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக உடையன; உலகமானது ஆதிபகவனே முதலாக உடையது.

2. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.

பத. கற்றதனால், படித்ததனால்; ஆய, உண்டாகிய; பயன், பிரயோசனம்; என், யாது; (கொல், அசைநிலை.) வால், மெய் யான; அறிவன், அறிவையுடையவனது; நல், நல்ல; தாள், பாதத்தை; தொழாஅரெனின், வணங்காராயின்.

பொழி. மெய்யறிவையுடைய கடவுளது திருப்பாதத்தை வணங்காராயின், எல்லா நூல்களையும் கற்றதனால் ஆகிய பிர யோசனம் என்ன?

கருத்து. கல்வி அறிவுக்குப் பயன் கடவுளை வணங்குதல்.

3. தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான் மனக்கவலை மாற்றலரிது.

பத. தனக்கு, தனக்கு; உவமை, நிகர்; இல்லாதான், இல்லாதவன்; தாள், பாதத்தை; சேர்ந்தார்க்கு, சேர்ந்தவர்க்கு; அல்லால், அல்லாமல்; மனக்கவலை, மனத்துன்பம்; மாற்றல், நீக்கல்; அரிது, அருமை.

பொழி. (ஒருவிதத்தாலும்) தனக்கு நிகரில்லாதவனது பாதத்தைச் சேர்ந்தவருக்கல்லாமல் மனத்துன்பங்களை நீக்குகிறது அரிது.

கருத்து. கடவுள் பாதத்தையடைபாதலை தம் மனத்துன்பத்தை நீக்குதல் கூடாது.

4 விசும்பிற் றுளிவீழி னல்லாண்மற் றாங்கே பசும்புற் றலைகாண் பரிது.

பத. விசும்பில், மேகத்தில் நின்று; துளி, (மழைத்) துளி; வீழின், விழுந்தால்; அல்லால், அல்லாமல்; மற்று, மற்று; ஆங்கே, அப்பொழுதே; பசும், பசுமையான; புல், புல்; தலை, தலை; காண்டல், காணுதல்; அரிது, அருமை.

பொழி. மேகத்தினின்று நீர்த்துளி விழாமற்போனால் அப்பொழுதே பசும்புல்லின் தலையையும் காணுதல் அரிது.

5. உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான் வரனென்னும் வைப்புக்கோர் வித்து.

பத. உரன், அறிவு; என்னும், என்கின்ற; தோட்டியான், அங்குசத்தால்; ஓர், ஒரு; ஐந்தும், ஐந்தையும்; காப்பான்,

காப்பவன்; வான், உயர்வு; என்னும், என்கின்ற; வைப் பிற்கு, நிலத்துக்கு; ஓர், ஒரு; வித்து, விதை.

பொழி. அறிவென்னும் அங்குசத்தால் (பொறிகளாகிய யானை) ஐந்தையும் காப்பவன் மேலாயதென்று சொல்லப் பட்ட மோட்சநிலத்துக்கு ஒரு வித்தாவான்.

சருத்து. ஐம்பொறிகளை படக்கிக்காப்பவன் மோட்சத்துக்குரியவன்.

6. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

பத. செயற்கு, செய்தற்கு; அரிய, அருமையானவை; செய்வார், செய்பவர்; பெரியர், பெரியவர்; சிறியர், சிறியவர்; செயற்கு, செய்தற்கு; அரிய, அருமையானவை; செய்கலாதார், செய்யமாட்டாதவர்.

பொழி. செய்தற்கரிதானவைகளைச் செய்பவர் பெரியோர்; செய்தற்கரிதானவைகளைச் செய்யமாட்டாதவர் சிறியோர்.

7. ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

பத. ஒல்லும், இயலும்; வகையான், திறத்தால்; அறம், தருமமாகிய; வினை, கல்வினையை; ஓவாதே, இடைவிடாமல்; செல்லும், செல்கின்ற; வாய், இடங்களால்; எல் லாம், எல்லாம்; செயல், செய்க.

பொழி. தத்தமக்கு இயலுந்திறத்தால் தருமமாகிய கல்வினையை இடைவிடாமல் செல்லும்வகையாலெல்லாஞ் செய்க.

கருத்து. மனம் வாக்கு காயங்களால் இயன்றமாத்திரம் தருமஞ் செய்யவேண்டும்.

8. மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர பிற.

பத. மனத்துக்கண், மனசினிடத்திலே; மாசு, குற்றம்; இலன், இல்லாதவன்; ஆதல், ஆகுதல்; அனைத்து, அவ்வளவே; அறன், தருமம்; ஆகுலம், ஆரவாரம்; நீர, தன்மைய; பிற, மற்றவை.

பொழி. மனசிலே குற்றமற்றவனாயிருப்பதே தருமம், சொல்லும் வேஷமும் என்ற மற்றவை யாவும் ஆரவாரகுணத்தை உடையவை.

9. அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை.

பத. அன்று, அங்காளில்; அறிவாம், அறிவோம்; என்னாது, என்று நினையாமல்; அறம், தருமம்; செய்க, செய்க; (மற்று அசைநிலை.) அது, அது; பொன்றுங்கால், இறக்குங்காலத்தில்; பொன்னாத, அழியாத; துணை, உதவி.

பொழி. (இறக்கும்) நாளில் தருமத்தைச் செய்வோம் என்று நினையாமல், (தினந்தோறும்) செய்க; அது, இறக்குங்காலத்தில் அழியாத துணையாம்.

10. செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி.

பத. செயல், செய்தல்; பாலது, பான்மையது; அறனே, தருமமே; ஒருவற்கு, ஒருவனுக்கு; உயற்பாலது, நீங்கற்பான்மையது; பழி, தீவினை. (ஒரும் என்ற இரண்டும் அசைநிலை.)

பொழி. ஒருவனுக்குச் செய்தற்குரியது நல்வினை, விலக்கற் குரியது தீவினை.

11. அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை பண்பும் பயனு மது.

பத. அன்பும், அன்பும்; அறனும், தருமமும்; உடைத்தா யின், உடையதானால்; இல்வாழ்க்கை, இல்வாழ்க்கையா னது; பண்பும், குணமும்; பயனும், பிரயோசனமும்; அது, அது.

பொழி. ஒருவனுடைய இல்வாழ்க்கையானது தன் துணை யிடமேற் செய்யத்தகும் அன்பையும், பிறர்க்குப் பகுத்துண் ணலாகிய தருமத்தையும் உடையதானால், அவ்வுடைமை அதற்குப் பண்பும் பயனுமாகும்.

கருத்து. இல்வாழ்க்கைக்கு மனையிடமேலுள்ள அன்பு பண்பும்; பிறர்க்குப் பகுத்துண்ணல் பயனுமாம்.

12. இல்லதெ னில்லவண் மாண்பாஞ லுள்ளதெ னில்லவண் மாணாக் கடை.

பத. இல்லது, இல்லாதது; எவ், யாது; இல்லவள், மனைவி; மாண்பாஞல், மாட்சிமையுடையவளானால்; உள் ளது, உண்டானது; எவ், யாது; இல்லவள், மனைவி; மாணா, மாட்சிமைப்படாள்; கடை, ஆயின்.

பொழி. ஒருவனுக்கு, மனையாள் (நற்குண நற்செய்கை என்ற) சிறப்பை உடையவளாயிருந்தால், இல்லாதது என்ன? அது இல்லாதவளாயிருந்தால், என்ன உண்டு?

13. சிறைகாக்குங் காப்பெவன் செய்பு மகளீர்
நிறைகாக்குங் காப்பே தலை.

பத. சிறை, சிறையானது ; காக்கும், காக்கின்ற ; காப்பு, காவல் ; எவன், என்ன ; செய்யும், செய்யும் ; மகளீர், மாதர்கள் ; நிறை, நிறுத்துதல் ; காக்கும், காக்கின்ற ; காப்பே, காவலே ; தலை, முதன்மை.

பொழி. (தலைவர் செய்த சிறையால்) காக்கின்ற காவல் என்ன பிரயோசனத்தைச் செய்யும். (மாதர்கள் தங்கள் கற்பிலே மனத்தை) நிறுத்துகையிலேலே காக்கின்ற காவலே முதன்மையானது.

14. தந்தை மகற்காற்று நன்றிய வையத்து
முந்தி யிருப்பச் செயல்.

பத. தந்தை, தகப்பன் ; மகற்கு, மகனுக்கு ; ஆற்றும், செய்யும் ; நன்றி, நன்மை ; அவையத்து, சபையினிடத்து ; முந்தி, முற்பட்டு ; இருப்ப, இருக்க ; செயல், செய்வது.

பொழி. தகப்பன் புத்திரனுக்குச் செய்யும் நன்மையாவது, அவனைக் கல்வியில் வல்லவனுக்கிக் கற்றவரது சபையினிடத்து முற்பட இருக்கச்செய்தலே.

15. தம்மிற் றம்மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.

பத. தம்மின், தம்மினும் ; தம், தமது ; மக்கள், புத்திரர் ; அறிவுடைமை, அறிவுடைத்தாயிருப்பது ; மா, பெருமை ; நிலத்து, உலகத்தில் ; மன், நிலைபெறுகின்ற ; உயிர்க்கு, உயிர்களுக்கு ; எல்லாம், எல்லாம் ; இனிது, இனியது.

பொழி. தமது புத்திசா அறிவுடையவராயிருப்பது உல கத்தில் நிலைபெற்ற உயிர்களுக்கெல்லாம் இனிது.

16. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச் சான்றோ னெனக்கேட்ட தாய்.

பத. ஈன்ற, பெற்ற; பொழுதில், பொழுதினும்; பெரிது, மிக; உவக்கும், மகிழுவள்; தன், தனது; மகனை, புத்திரனை; சான்றோன், நிறைந்தோன்; என, என்று சொல்ல; கேட்ட, கேள்விப்பட்ட; தாய், தாயானவள்.

பொழி. தன் மகனைக் கல்வி கேள்விகளால் நிறைந்தா னென்று சொல்லக் கேள்விப்பட்ட தாய், பெற்றபொழுது அடைந்த மகிழ்ச்சியினும் மிகவும் மகிழுவான்.

17. அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா 'ழார்வலர் புன்கணீர் பூசல் தரும்.

பத. அன்பிற்கும், அன்புக்கும்; உண்டோ, உளதோ; அடைகதவம், அடைத்துவைக்கும்; தாழ், தாழ்; ஆர்வலர், அன் புடையவர்; புல், புல்லிய; கணீர், கண்ணீர்; பூசல்தரும், தூற்றும்.

பொழி. அன்பிலுக்கும் அடைக்குந் தாழ்க்கோல் உண் டோ, நேசிக்கப்பட்டவரின் துன்பங்கண்டபோது அன்புடை யாரின் கண்ணீரே தமக்குள்ள அன்பை யாவரும் அறியத் தூற்றும்.

18. அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா ரென்பு முரியர் பிறர்க்கு.

பத. அன்பு, அன்பு; இலார், இல்லாதவர்; எல்லாம், யாவும்; தமக்கு, தங்களுக்கு; உரியர், உரியராவர்; அன்பு,

அன்பை ; உடையர் ; உடையவர் ; என்பும், எலும்பும் ; உரியர், உரியவர் ; பிறர்க்கு, மற்றவர்க்கு.

பொழி. அன்பில்லாதவர் எல்லாப் பொருளாலும் தமக்கே உரியராவர் ; அன்புடையவர் தம்முடைய உடம்பாலும் பிறர்க்கு உரியவர்.

19. மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

பத. மோப்ப, மோந்துபார்க்க ; குழையும், வாடும் ; அனிச்சம், அனிச்சப்பூவானது ; முகம், முகம் ; திரிந்து, வேறுபட்டு ; நோக்க, பார்க்க ; குழையும், வாடுவான் ; விருந்து, விருந்தினன்.

பொழி. அனிச்சமலரை மோந்தால் வாடும், விருந்தினனை முகம் வேறுபட்டுப்பார்க்க வாடுவான்.

20. பணிவுடைய னின்சொல்ல னாத லொருவற்
கணியல்ல மற்றும் பிற.

பத. பணிவு, வணக்கம் ; உடையன், உடையவன் ; இன், இனிய ; சொல்லன், சொல்லையுடையவன் ; ஆதல், ஆகுதல் ; ஒருவற்கு, ஒருவனுக்கு ; அணி, ஆபரணம் ; அல், அல்ல ; (மற்று, அசை.) பிற, மற்றவை.

பொழி. வணக்கமுடையவனாகி, இன்சொல்லையுமுடையவனாதல், ஒருவனுக்கு ஆபரணமாம் ; மற்றவை ஆபரணங்களல்ல.

கருத்து. பெரியவர்களிடத்து வணக்கமுடையவனும் மற்றெல்லாரிடத்தும் இனிய சொல்லையுடையவனாதல் ஒருவனுக்கு ஆபரணமாம்.

21. இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

பத. இனிய, இன்சொற்கள்; உளவாக, உண்டாயிருக்க; இன்னாத, தீயசொற்கள்; கூறல், கூறுதல்; கனி, பழம்; இருப்ப, இருக்க; காய், காயை; கவர்ந்தற்று, தின்றதன்மை.

பொழி. (புண்ணியத்தைத்தரும்) இனிய சொற்கள் தன்னிடத்து உண்டாயிருக்க, (பாவத்தைத்தரும்) கடுஞ்சொற்களைச் சொல்லுதல், பழமிருக்கக் காயைத் தின்றதுபோலாகும்.

22. செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.

பத. செய்யாமல், செய்யாதிருக்க; செய்த, செய்த; உதவிக்கு, நன்றிக்கு; வையகமும், மண்ணுலகும்; வானகமும், விண்ணுலகும்; ஆற்றல், கொடுத்தல்; அரிது, (ஈடாக) மாட்டாது.

பொழி. (தனக்கு முன்னொரு உதவி) செய்யாதிருக்க (ஒருவன் பிறனுக்குச் செய்த) உதவிக்கு, மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் (கைமாறாகக்) கொடுத்தாலும் ஈடாகாது.

23. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

பத. தினை, தினை; துணை, அளவு; நன்றி, உபகாரம்; செயினும், செய்தாலுமும்; பனை, பனை; துணையா, அளவாக; கொள்வர், கொள்வார்கள்; பயன், பயனை; தெரிவார், தெரியத்தக்கவர்.

பொழி. தினையளவு உபகாரத்தைச் செய்தாலும், அதைப் பனையளவாகக் கருதுவர், அதின் பிரயோசனத்தை அறியத் தக்கவர்.

24. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க துன்பத்துட் டுப்பாயார் நட்பு.

பத. மறவற்க, மறவாதிருக்கக்கடவன்; மாசற்றார், குற்ற மற்றவரது; கேண்மை, உறவை; துறவற்க, விடாதிருக்கக் கடவன்; துன்பத்துள், துன்பத்தில்; துப்பு, ஊன்றுகோல்; ஆயார், ஆயின்வருடைய; நட்பு, சிநேகம்.

பொழி. குற்றமற்றவருடைய உறவை மறவாதிருக்கக் கட வன், துன்பத்தில் ஊன்றுகோலானவருடைய சிநேகத்தை விடாதிருக்கக்கடவன்.

கருத்து. குற்றமறறவர் சிநேகத்தையும் விடக்கூடாது, துன்பத தில் உதவினவருடைய சிநேகத்தையும விடக்கூடாது.

25. நன்றிமறப்பது நன்றன்று நன்றல்ல தன்றே மறப்பது நன்று.

பத. நன்றி, நன்மையை; மறப்பது, மறந்துவிடுவது; நன்று, தருமம்; அன்று, அல்ல; நன்று, நன்மை; அல்லது, அல்லாததை; அன்றே, அப்பொழுதே; மறப்பது, மறந்து விடுவது; நன்று, தருமம்.

பொழி. (ஒருவன் முன் செய்த) நன்மையை மறந்துவிடு வது தருமம் அல்ல; அவன் செய்த தீமையை அப்பொழுதே மறப்பது தருமம்.

26. எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு.

பத. எ, எந்த; நன்றி, நன்மை; கொன்றார்க்கும், அழித்தவர்க்கும்; உய்வு, ஒழிவு; உண்டாம், உண்டாகும்; உய்வு, ஒழிவு; இல்லை, இல்லை; செய், செய்த; நன்றி, உதவியை; கொன்ற, கெடுத்த; மகற்கு, மனிதனுக்கு.

பொழி. எந்த தருமங்களைச் சிதைத்தார்க்கும் நீங்கும் வழியுண்டாகும்; ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்தவனுக்கு அதில்லை.

27. செப்ப முடையவ னுக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து.

பத. செப்பமும், நடுவுநிலைமை; உடையவனின்; ஆக்கம், செல்வம்; சிதைவு, அழிவு; இன்றி, இல்லாமல்; எச்சத்திற்கு, சந்ததிக்கு; ஏமப்பு, இன்பமாவதை; உடைத்து, உடையது.

பொழி. நடுவுநிலைமையை யுடையவனது செல்வம், அழிவில்லாமல் அவன் சந்ததிக்கும் உதவும்.

28. நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல்.

பத. நன்றே, நன்மையே; தரினும், கொடுத்தாலும்; நடுவு, நடுவுநிலைமையை; இகந்து, நீங்கி; ஆம், உண்டாகும்; ஆக்கத்தை, செல்வத்தை; அன்றே, அப்பொழுதே; ஒழியவிடல், நீங்கவிடுக.

பொழி. நன்மையே தந்தாலும் நடுவுநிலையிலிருந்து நீங்கி உண்டாகுஞ் செல்வத்தை அப்பொழுதே விடவேண்டும்.

29. சமஞ்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொரா
கோடாமை சான்றோர்க் கணி. [ருபாற்

பத. சமம், சமன்; செய்து, (நிற்றல்) செய்து; சீர்தூக்கும், வரையறுக்கும்; கோல், துலாம்; போல், போல; அமைந்து, பொருத்தி; ஒரு, ஒரு; பால், பக்கம்; கோடாமை, சாயாமை; சான்றோர்க்கு, மேன்மக்களுக்கு; அணி, அழகு.

பொழி. தான் சமனுகநின்று தன்னிடத்து வைத்த பொருளை வரையறுக்கும் துலாம்போல, இலக்கணங்களைப் பொருந்தி ஒரு பக்கத்திலே சாராதிருப்பது பெரியோர்களுக்கு அழகு.

கருத்து. பகைவர், நண்பன், மத்தியஸ்தன் என்ற மூவர்க்கும் ஒப்பச்சொல்லுதல்.

30. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்.

பத. வாணிகம், வியாபாரம்; செய்வார்க்கு, செய்பவர்க்கு; வாணிகம், வியாபாரம்; பேணி, விரும்பி; பிறவும், பிறர்பொருளையும்; தமபோல், தம்பொருள்போல; செயின், செய்தால்.

பொழி. பிறர்பொருளையும் தம்பொருள்போல நாடி வியாபாரஞ்செய்தால், வியாபாரிகளுக்கு நன்றாய் வியாபாரம் பலிக்கும்.

31. எல்லார்க்கு நன்றும் பணிதல வருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து

பத. எல்லார்க்கும், அனைவர்க்கும்; நன்றும், நல்லதாகும்; பணிதல், அடங்குதல்; அவருள்ளும், அவ்வினைஞருள்ளும்; செல்வர்க்கே, செல்வமுடையவர்க்கே; செல்வம், செல்வம்; தகைத்து, சிறப்பையுடையது.

பொழி. அடங்குதல் எல்லார்க்கும் நன்றாயினும், செல்வமுடையார்க்கு அது மேலொரு செல்வமாகத் தோன்றும்.

32. யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

பத. யா, யாதையும்; காவாராயினும், காக்கமாட்டாராயினும்; நா, நாவு; காக்க, காக்கக்கடவர்; காவாதகால், காக்காவிட்டால்; சோகாப்பர், துன்பப்படுவர்; சொல், சொல்; இழுக்கு, குற்றத்தில்; பட்டு, அகப்பட்டு.

பொழி. எல்லாவற்றையும் காக்காவிட்டாலும், நாவு ஒன்றையே காக்கக்கடவர்; அதைக் காக்காவிட்டால் சொற் குற்றத்தில் அகப்பட்டுத் துன்பம் அடைவார்.

33. தீயினுஞ் சுட்டபுண் ணுள்ளாறு மாறுமே
நாவினுஞ் சுட்ட வடு.

பத. தீயினுல், நெருப்பினுல்; சுட்ட, சுட்ட; புண், புண்ணானது; உள், மனதில்; ஆறும், ஆறிப்போம்; ஆறுமே, ஆறுமே; நாவினுல், நாவினுலே; சுட்ட, சுட்ட; வடு, காயம்.

பொழி. நெருப்பினுலே சுட்டபுண் மனதிலே ஆறிப்போகும்; நாவினுலே சுட்ட வடுவானது ஆறுதிருக்கும்.

34. நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க மென்று மிடும்பை தரும்.

பத. நன்றிக்கு, தருமத்துக்கு; வித்தாகும், விதையாகும்; நல், நல்ல; ஒழுக்கம், ஒழுக்கமானது; தீ, தீய; ஒழுக்கம், ஒழுக்கமானது; என்றும், எக்காலத்தும்; இடும்பை, துன்பம்; தரும், விளைவிக்கும்.

பொழி. நல்லொழுக்கமானது தருமத்திற்குக் காரணமாய் என்றும் இன்பத்தைத் தரும்; தீய ஒழுக்கம் பாவத்திற்குக் காரணமாய் என்றும் துன்பத்தைத் தரும்.

35. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை யிகழ்வார்ப் பொறுத்த றலை.

பத. அகழ்வாரை, தோண்டுகின்றவரை; தாங்கும், சுமக்கும்; நிலம், பூமி; போல, போல்; தம்மை, தங்களை; இகழ்வார், நிந்திப்பவரை; பொறுத்தல், சகித்தல்; தலை, தலைமை.

பொழி. தன்னைத் தோண்டுகிறவரைச் சுமக்கும் பூமியைப்போலத் தம்மை நிந்திப்பாரைப் பொறுத்தலே தலைமையாகிய தருமம்.

36. பொறுத்த லிறப்பினை யென்று மதனை மறத்த லதனினு நன்று.

பத. பொறுத்தல், பொறுக்கக்கடவர்; இறப்பினை, மிகையை; என்றும், கிடைத்தும்; அதனை, அதை; மறத்தல், மறக்கவிடுவது; அதனினும், அத்தப் பொறுமையிலும்; நன்று, நன்றாகும்.

பொழி. தாம் வருத்துகிறதற்கு இயன்ற காலம் கிடைத்

தும், பிறர்செய்த தீங்கைப் பொறுப்பது நன்று ; அதை மறந் துவிடுவது அப்பொறுமையைப் பார்க்கிலும் நன்று.

37. ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க் பொன்றுந் துணையும் புகழ். [குப்

பத. ஒறுத்தார்க்கு, வருத்தினவர்க்கு ; ஒரு, ஓர் ; நாளை, தினத்து; இன்பம், இன்பம்; பொறுத்தார்க்கு, பொறுத்தவர்க் கு ; பொன்றும், அழியும் ; துணையும், அளவும் ; புகழ், புகழ்.

பொழி. தண்டித்தவர்க்கு உண்டாவது ஒரு தினத்து இன்பம் ; பொறுத்தவர்க்கு (உலகம்) அழியுமளவும் புகழ் உண்டாகும்.

38. அழுக்கற் றகல்வருரு மில்லை யஃதில்லார் பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்.

பத. அழுக்கற்று, பொறாமைப்பட்டு ; அகன்றாரும், பெரு கினவரும் ; இல்லை, இல்லை ; அஃது, அது ; இல்லார், இல் லாதார் ; பெருக்கத்தின், பெருக்கத்தினின்று ; தீர்ந்தாரும், நீங்கினவரும் ; இல், இல்லை.

பொழி. பொறாமைப்பட்டுப் பெருத்தவருமில்லை, அப் பொறாமையில்லாமல் சிறுத்தவருமில்லை.

39. வேண்டற்க வெஃகியா பாக்கம் விளைவயின் மாண்டற் கரிதாம் பயன்.

பத. வேண்டற்க, விரும்பாதிருக்க ; வெஃகி, இச்சித்து ; ஆம், ஆகும் ; ஆக்கம், செல்வம் ; விளைவயின், அதுபவிக்கு மிடத்து ; மாண்டற்கு, மாட்சிமைப்படுதற்கு அரிதாம், அரிய தாகும் ; பயன், பலன்.

பொழி. பிறர் பொருளை விரும்பிக்கொண்டதினாலே உண்டாகும் செல்வத்தை விரும்பாதிருக்க, அதன் பயன் அனுபவிக்க முடியாது.

40. பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறந்தெரிந்து கூறப் படும்.

பத. பிறன், பிறனுடைய; பழி, பழியை; கூறுவான், சொல்பவன்; தன், தன்னுடைய; பழியுள், பழிகளுள்ளும்; திறம், தன்மை; தெரிந்து, ஆராய்ந்து; கூறப்படும், சொல்லப்படுவான்.

பொழி. பிறன்பழியைச் சொல்பவன் தன்னுடைய பழிகள் பலவற்றுள்ளும் (வருத்தப்படத்தும்) தன்மையுடைய பழிகளை (அவனுடைய) சொல்லப்படுவான்.

41. ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
றீதுண்டோ மன்னு முயிர்க்கு.

பத. ஏதிலார், அந்நியர்; குற்றம், குற்றம்; போல், போல; தம், தம்முடைய; குற்றம், குற்றத்தையும்; காண்கிற், காண்பாராயின்; தீது, துன்பம்; உண்டோ, உண்டாமோ; மன்னும், நிலைபெறும்; உயிர்க்கு, உயிர்க்கு.

பொழி. அந்நியர் குற்றத்தை ஆராய்தல்போல தம்முடைய குற்றத்தையும் ஆராய்வாரின் உயிருக்குத் துன்பமுண்டோ.

42. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

பத. சொல்லுக, சொல்லக்கடவர்; சொல்லில், சொற்களில்; பயனுடைய, பிரயோசனமுடைய சொற்களை; சொல்லற்க, சொல்லாதிருக்கக்கடவர்; சொல்லில், சொற்களில்; பயன், பிரயோசனம்; இலா, இல்லா; சொல, சொற்களை.

பொழி. சொற்களில் பயனுடைய சொற்களைச் சொல்லக்கடவர்; சொற்களில் பிரயோசனமில்லாத சொற்களைச் சொல்லாதிருக்கக்கடவர்.

43. தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்.

பத. தீயவை, தீவினைகள்; தீய, தன்பங்கள்; பயத்தலால், தருதலால்; தீயவை, தீவினைகள்; தீயினும், நெருப்பிலும்; அஞ்சப்படும், பயமடையப்படும்.

பொழி. தீவினைகள் துன்பம் தருதலால், நெருப்பிலும் பயமடையப்படும்.

44. இலனென்று தீயவை செய்யற்க செய்யி
னிலனாகு மற்றும் பெயர்த்து.

பத. இலன், இல்லன்; என்று, என்று; தீயவை, தீவினைகள்; செய்யற்க, செய்யாதிருக்கக்கடவன்; செய்யின் செய்வானாயின்; இலன், இல்லன்; ஆதும், ஆவான்; (மற்றும், அசை நிலை.) பெயர்த்து, மறுபடியும்.

பொழி. பொருள் இல்லாதவனென்று தீவினைகளைச் செய்யாதிருக்கக்கடவன்; செய்வானாயின் மறுபடியும் இல்லாதவனாவான்.

45. தீயவை செய்தார் கெடுதல் நிழறன்னே
வீயா தடியுறைந் தற்று.

பத. தீயவை, தீவினை; செய்தார், செய்தவர்; கெடுதல், கெடுவது; நிழல், சாயையான நிழல்; போல, தன்னை; வீயாது, நீங்காது; அடி, பாதத்தில்; உறைந்தற்று, தங்கினதன்மைத்து.

பொழி. தீவினை செய்தவர் கெடுவதை, ஒருவனுடைய நிழலானது அவனை நீக்காமல் பாதத்திலே தங்கினதன்மையாகும்.

46. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டெண்ணுற்றுங் கொல்லோ வுலகு.

பத. கைம்மாறு, பிரதியுபகாரம்; வேண்டா, விரும்பாம்; கடப்பாடு, முறைமைப்பாடுகள்; மாரி, மேகம்; மாடு, இடத்தை; எண், எண்ணை; ஆற்றும், செய்யும்; (கொல், ஓ, இரண்டும் அசைநிலை.) உலகு, உயிர்கள்.

பொழி. கடமையானது பிரதியுபகாரத்தை நோக்கினதல்ல; உலகத்தோர் மேகத்துக்கு என்ன பிரதியுபகாரத்தைச் செய்கிறார்கள்.

47. நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று.

பத. நல், நல்ல; ஆறு, வழி; எனினும், என்றாலும்; கொளல், இரப்பது; தீது, தீமை; மேல், மேலாகிய; உலகம், உலகம்; இல், இல்லை; எனினும், என்றாலும்; ஈதலே, கொடுத்தலே; நன்று, நல்லது.

பொழி. இரப்பது (மோட்சத்துக்கு) நல்லவழியென்று சொல்லப்படினும் அது தீது; மோட்ச உலகம் இல்லையென்று சொல்லப்படினும் கொடுத்தலே நல்லது.

48. ஈத்துவக்கு மின்ப மறியார்கொ றுழுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

பத. ஈத்து, கொடுத்து; உவக்கும், மகிழும்; இன்பம், சுகத்தை; அறியார்கொல், அறியாரோ; நாம, தம்முடைய உடைமை, பொருள்; வைத்து, வைத்து; இழக்கும், இழந்து விடும்; வன்கணவர், அருளில்லாதார்.

பொழி. தரித்திருக்குக் கொடுத்த மகிழும் இன்பத்தைத் தங்கள் பொருளைக் (கொடுக்காமல்) வைத்துப் (பின்) இழந்துபோகும் அருளில்லாதார் கண்டு அறியார்களோ.

49. பொருளற்றூர் பூப்ப சொருகா ரருளற்று
ரற்றூர்மற் றூதலரிது.

பத. பொருள், நிரவியம்; அற்றார், அல்லாதவர், பூபோ, சிறப்பையடைவர்; ஒருகால், ஒருகாலத்து; அருள், அருள்; அற்றார், இல்லாதவர்; அற்றார், அழிந்தவரே; மற்று, பின்; ஆதல், ஆகுதல்; அரிது, இல்லை.

பொழி. நிரவியமில்லாதவர் ஒருகாலத்தைச் செல்வமுடையவராவர்; அருளில்லாதவர் அழிந்தவரே. பின்னெருகாலத்தும் விருத்தியடைவதில்லை.

50. வலியார்முற நணினை நினைக்கதான் றன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து.

பத. வலியார், வல்லமையுடையவர்; முன், முன்பு; தன்னை, தன்னை; நினைக்க, நினைக்கக்கடவன்; தான், தான்; தன்னின், தன்னிலும்; மெலியார், எளியவர்; மேல், மேலே; செல்லுமிடத்து, போகுமிடத்து.

விமல

பொழி. எளியாரை (வருத்தப்படுத்த) அவர்கள்மேல் போகும்போது, வலியவர்முன் தான் அஞ்சி நின்றதை நினைக்க.

51. வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந் தானறி குற்றப் படின்.

பத. வான், வானைப்போல்; உயர், உயர்ந்த; தோற்றம், வேஷமானது; எவன், என்ன; செய்யும், (பிரயோசனத்தைச்) செய்யும்; தன், தன்னுடைய; நெஞ்சம், மனம்; தான், தான்; அறி, அறிந்த; குற்றம், குற்றத்தினிடத்தது; படின், தங்குமாயின்.

பொழி. வான்போலுயர்ந்த தவேஷந் என்ன பயனைச் செய்யும்; தன்னுடைய மனம் தானறிந்த குற்றத்தினிடத்துத் தங்குமாயின்.

52. கணைகொடி தியாழ்கோடு செவ்விதாங் கன்ன வினைபடு பாலாற் கொளல்.

பத. கணை, அம்பு; கொடிது, (கோணவில்லாதாயினும்) கொடுமையையுடையது; யாழ், வீணை; கோடு, கோணல்; செவ்விது, செப்பத்தையுடையது; ஆங்கு, அப்படி; அன்ன, போல; வினை, செயல்; படு, பட்ட; பாலால், பகுதியால்; கொளல், கொள்க.

பொழி. அம்பு (செவ்விதாயிருந்தாலும்) கொடியது; வீணை கோணலாயிருந்தாலும் செப்பமுடையது; அதுபோல செயலின் தன்மையினாலே குணத்தை அறிந்துகொள்க.

53. மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்.

பத. மழித்தலும், முண்டித்தலும்; நீட்டலும், சடை செய்தலும்; வேண்டா, வேண்டாவாம்; உலகம், உயர்ந்தோர்கள்; பழித்தது, குற்றஞ்சொல்லியது; ஒழித்துவிடின், நீக்கிவிடின்.

பொழி. உயர்ந்தோர் (தவத்துக்காகாதென்று) குற்றஞ் சொல்லியதை நீக்கிவிட்டால், (தலைமயிரைச்) சிரைத்தலும் நீளச்செய்தலும் வேண்டியதில்லை.

54. உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளாக்
கள்ளத்தாற் கள்வே மெனல்.

பத. உள்ளத்தால், மனதினால்; உள்ளலும், நினைத்தலும்; தீதே, பாவமே; பிறன், பிறனுடைய; பொருளை, உடைமையை; கள்ளத்தால், வஞ்சனையினாலே; கள்வேம், களவுசெய்வோம்; எனல், என்காதே.

பொழி. பிறன்பொருளை வஞ்சித்துக் களவுசெய்வோம் என்று சொல்லாதே; மனதினால் அப்படி நினைத்தலும் பாவம்.

55. களவினு லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும்.

பத. களவினால், களவுசெய்தலினால்; ஆகிய, உண்டாகிய; ஆக்கம், பொருளானது; அளவு, எல்லை; இறந்து, கடந்து; ஆவது, வளர்வது; போல, போலே; (தோன்றி) கெடும், அழியும்.

பொழி. களவினால் உண்டாகிய பொருள் வளர்வது போலத் தோன்றி தன் எல்லையைக் கடந்து கெடும்.

56. **களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண் வீயா விழுமந் தரும்.**

பத. களவின்கண், களவுசெய்தவிடத்து; கன்றிய, மிகுந்த; காதல், ஆசையானது; விளைவின்கண், அநுபவிக்கும் போது; வீயா, நீங்காத; விழுமம், துன்பம்; தரும், கொடுக்கும்.

பொழி. களவு செய்வதிலே மிகுந்த இச்சையானது பயன் கொடுக்கும்பொழுது தொலையாத துன்பத்தைக் கொடுக்கும்.

57. **தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின் றன்னெஞ்சே தன்னைச் சுடும்.**

பத. தன், தன்னுடைய; நெஞ்சு, மனம்; அறிவது, அறிவதை; பொய்யற்க, பொய்யாதிருக்கக்கடவன்; பொய்த்த பின், பொய்சொன்னபின்; தன், தன்னுடைய; நெஞ்சே, மனமே; தன்னை, தன்னை; சுடும், வருத்தும்.

பொழி. தன் மனம் அறிவதை (மறைத்து) பொய் சொல்லாமலிருக்கக்கடவன்; பொய் சொன்னவனின் தன் மனமே தன்னை வருத்தும்.

58. **எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு.**

பத. எல்லா, எல்லா; விளக்கும், விளக்குகளும்; விளக்கு, விளக்கு; அல்ல, அல்ல; சான்றோர்க்கு, பெரியோர்க்கு;

பொய்யா, பொய்யாத; விளக்கே, விளக்கே; விளக்து, விளக்கு.

பொழி. (சூரியன், சந்திரன், தீ என்ற) விளக்குகளெல்லாம் விளக்குகளல்ல; பொய்யாமையாகிய சத்தியவிளக்கே விளக்கு.

59. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்.

பத. தன்னை, தன்னை; காக்கின், காக்க; சினம், கோபம்; காக்க, அடக்க; காவாக் கால், காக்காவிட்டால்; தன்னையே, தன்னையே; கொல்லும், கெடுக்கும்; சினம், கோபம்.

பொழி. தன்னைத்தான் காக்கும்படி நினைப்பாளையின் கோபத்தை அடக்கக்கடவன்; அதைக் காக்காவிட்டால் (அந்தக்) கோபம் தன்னையே கெடுக்கும்.

60. சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னு
செய்யாமை மாசற்றார் கோள்.

பத. சிறப்பை, சிறப்பை; ஈனும், தருகின்ற; செல்வம், செல்வத்தை; பெறினும், பெலாமாயினும்; பிறர்க்கு, அந்நியருக்கு; இன்னா, துன்பம்; செய்யாமை, செய்யாதிருத்தல்; மாசற்றார், குற்றமற்றவருடைய; கோள், கொள்கை.

பொழி. (பிறர்க்குத்) தின்பஞ்செய்து சிறப்பைத் தரும் செல்வங்களைப் பெறக்கூடுமாயினும், மாசற்றவர் அதைச் செய்யாதிருப்பதே அவர் கோட்பாடு.

61. கருத்தின்னு செய்தவக் கண்ணு மறுத்தின்னு
செய்யாமை மாசற்றார் கோள்.

பத. கருத்து, கோபித்து; இன்னு, துன்பங்களை; செய்த, செய்த; அ, அந்த; கண்ணும், இடத்தும்; மறுத்து, மீண்டும்; இன்னு, துன்பங்களை; செய்யாமையும்; மாசற்றார், குற்றமற்றவரது; கோள், தன்மை.

பொழி. (தமக்குப் பிறர்) துன்பங்களைச் செய்தவிடத்தும் அதற்கு எதிராகச் செய்யாதிருத்தல் குற்றமற்றவருடைய கொள்கை.

62. இன்னுசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

பத. இன்னு, துன்பங்கள்; செய்தாரை, (தமக்குச்) செய்தவர்களை; ஒறுத்தல், வருத்துதலாவது; அவர், அவர்; நாண, நாணும்படி; நன், நல்ல; நயம், மகிழ்ச்சியை; செய்து, செய்து; விடல், விடுக.

பொழி. துன்பம் செய்தவர்களுக்குத் துன்பஞ் செய்தலாவது, அவர்கள் நாணும்படி நல்ல மகிழ்ச்சியுண்டாகும்படி செய்து, (தீங்குகளை மறந்து) விடுவது.

63. எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானு
மாணுசெய் யாமை தலை.

பத. எனைத்தானும், எவ்வளவாயினும்; எஞ்ஞான்றும், எக்காலத்திலும்; யார்க்கும், எவர்க்கும்; மனத்தான், மனத்தோடு; ஆம், உண்டாகும்; மாண, துன்பங்களை; செய்யாமை, செய்யாதிருத்தலே; தலை, முதன்மை.

பொழி. மனமறிந்து, தன்பத்தைச் சிறிதாயினும் எக்காலத்திலும் எவருக்கும் செய்யாதிருத்தலே தலை (யான தருமம்.)

64. பிறர்க்கின்னு முற்பகற் செய்யிற் றமக்கின்னு பிற்பகற் றாமே வரும்.

பத. பிறர்க்கு, பிறருக்கு; இன்னா, துன்பங்கள்; முற் பகல், பகலின் முற்பகுதி; செய்யின், செய்வாராயின்; தமக்கு, தங்களுக்கு; இன்னா, துன்பங்கள்; பிற்பகல், பகலின்பிற்பகுதி; தாமே, தாமாய்; வரும், வரும்.

பொழி. பிறர்க்குத் துன்பங்களை முற்பகலில்லை செய்தால் (பிறர் செய்யாதிருக்க) பிற்பகலிலே தங்களுக்கே துன்பம் வரும்.

65. அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்று லற்குப வாங்கே செயல்.

பத. அற்கா, நிற்கா; இயலபிற்று, இயல்பையுடையது; செல்வம், ஐசுவரியம்; அது, அதை; பெற்றால், அடைந்தால்; அற்குப, நிற்பவைகளை; ஆங்கே, அப்பொழுதே; செயல், செய்க.

பொழி. நிலையில்லாத தன்மையையுடைய செல்வத்தைப் பெற்றால், நிலைபேறுடைய தருமங்களை அப்பொழுதே செய்க.

66. நெருநல் லுளனொருவ னின்றில்லை யென்னும் பெருமை யுடைத்திவ் வுலகு.

பத. நெருநல், நேற்று; உளன், இருக்கிறவன்; இன்று, இன்றைத்தினம்; இல்லை, இல்லை; என்னும், என்கும்;

பெருமை, பெருமையை; உடைந்து, உடையது; இ, இந்த; உலது, உலகம்.

பொழி. இவ்வுலகமானது நேற்று இருந்தவன் இன்றைக்கு இல்லையென்னும் (நிலையாமையாகிய) பெருமையுடையது.

67. ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப கோடியு மல்ல பல.

பத. ஒருபொழுதும், ஒரு (கணப்) பொழுதும்; வாழ்வது, வாழ்வதை; அறியார், அறியாதவர்; கருதுப, நினைப்பார்கள்; கோடியும், கோடியளவும்; அல்ல, அல்ல; பல, அநேகம்.

பொழி. (இன்னம் ஒரு கணப்) பொழுதளவாவது உயிரோடிருப்பதை அறியமாட்டாதவர்கள், கோடியளவல்ல பல கோடி நினைவுகளோ நினைப்பார்கள்.

68. ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின் வான நணிய துடைத்து.

பத. ஐயத்தின், சந்தேகத்தினின்று; நீங்கி, நீங்கி; தெளிந்தார்க்கு, அறிந்தவர்க்கு; வையத்தின், இவ்வுலகத்திலும்; வானம், முத்தியுலகம்; நணியது, சமீபம்; உடைத்து, உடையது.

பொழி. சந்தேகத்திலிருந்து (நீங்கி) மெய் உணர்ந்தார்க்கு வானம் பூமியைப்பார்க்கிலும் நெருங்கினது.

69. கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக.

பத. கற்க, கற்கக்கடவன்; கசடு, பழுது; அற, இல்லா மல்; கற்பவை, கற்கத்தகு நூல்களை; கற்றபின், கற்றபின்பு; நிற்க, நிற்கக்கடவன்; அதற்கு, அக்கல்விக்கு; தக, தகுதி யாக.

பொழி. கற்கத்தகு நூல்களைப் பழுதற்கக் கற்கக்கடவன்; கற்றபின்பு அதற்குத் தகுதியாக (அவை சொல்லுகிறபடியே) நிற்கக்கடவன்.

70. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

பத. கண், ஞானத்திரம்; உடையர், உடையவர்; என்பவர், என்று சொல்லப்படுவர்; கற்றோர், கற்றவரே; முகத்து, முகத் தினிடத்தில்; இரண்டு, இரண்டு; புண், புண்களை; உடை யர், உடையவர்; கல்லாதவர், படிக்காதவர்.

பொழி. கற்றவர் கண்ணுடையரென்றும், கல்லாதவர் முகத்தில் இரண்டு புண்ணுடையரென்றும் சொல்லப் படுபவர்.

71. தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.

பத. தொட்டனைத்து, தோண்டிய அளவினதாக; ஊறும், சுரக்கும்; மணல், மணலினிடத்தில்; கேணி, துரவு; மாந் தர்க்கு, மனிதர்களுக்கு; கற்றனைத்து, கற்ற அளவினதாக; ஊறும், சுரக்கும்; அறிவு, விவேகம்.

பொழி. மணற்கேணியானது தோண்டிய அளவு நீர் ஊறும்; மனிதருக்குப் படித்த அளவு அறிவு ஊறும்.

72. யாதானு நாடாமா லூராமா லென்னெனுருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

பத. யாதானும், யாதேனும்; நாடாமால், நாடாஞால்; ஊராமால், ஊராஞால்; என், என்ன; ஒருவன், ஒருவன்; சாம், சாகும்; துணையும், அளவும்; கல்லாதவாறு, கல்லாத விதம்.

பொழி. (கற்றவனுக்கு) எந்த நாடும் எந்த ஊரும் தன்னுடையதாஞால், சாகுமளவும் கல்லாதிருப்பதென்ன.

73. இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார் வாய்ச் சொல்.

பத. இழுக்கல், வழுக்குதல்; உடை, உடைய; உழி, இடம்; ஊற்றுக்கோல், ஊன்றுகோல்; அற்றே, அத்தன்மைத்து; ஒழுக்கம், ஒழுக்கத்தை; உடையார், உடையவர்; வாய், வாய்; சொல், வார்த்தை.

பொழி. ஒழுக்கமுடையவரின் வாய்ச்சொற்கள் வழுக்குதலுடைய (சேற்று) நிலத்திற்கு ஊன்றுகோலேயொக்கும்.

74. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொ
மெய்ப்பொருள் காண்ப தறிவு. [ருள்

பத. எப்பொருள், எந்தப்பொருள்; யார்யார், யாவர்யாவர்; வாய், வாயால்; கேடபினும், கேட்டாலும்; அப்பொருள், அந்தப்பொருள்; மெய், மெய்மை; பொருள், பயன்; காண்பது, அறிவது; அறிவு, விவேகம்.

பொழி. யாதொரு பொருளை யாவர் யாவர் வாயால் (சொல்லக்) கேட்டாலும், அப்பொருளின் மெய்யான பயனை அறிவதே விவேகம்.

75. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில.

பத. அஞ்சுவது, அஞ்சத்தகுவதை; அஞ்சாமை, அஞ்சுதல் செய்யாமை; பேதைமை, அறிவில்லாமை; அஞ்சுவது, அஞ்சத்தகுவதை; அஞ்சல், அஞ்சுதல்; அறிவார், விவேகமுடையவர்; தொழில, தொழில்.

பொழி. அஞ்சப்படுவதை அஞ்சாமை பேதைமை; அஞ்சப்படுவதை அஞ்சுவது அறிவுள்ளோர் தொழில்.

76. அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரொன்றுடைய ரேனு மிலர்.

பத. அறிவு, விவேகம்; உடையார், உள்ளவர்; எல்லாம், எல்லாவற்றையும்; உடையார், உள்ளவர்; அறிவு, அறிவு; இல்லார், இல்லாதவர்; ஒன்று, என்ன; உடையர், உடையவர்; ஏனும், ஆயினும்; இலர், இல்லாதவர்.

பொழி. அறிவுடையார்க்கொன்றுமில்லையாயினும் எல்லாம் உடையவர்; அறிவில்லாதவர் எல்லாம் உடைத்தாயிருந்தாலும், ஒன்றும் இல்லாதவரே.

77. நிலத்தியல்பா னீர்திரிந தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு.

பத. நிலத்து, நிலத்தினது; இயல்பால், தன்மையினாலே; நீர், நீரானது; திரிந்து, வேறுபட்டு; அற்றாகும், அத்தன்மைத்

தாகும்; மாந்தர்க்கு, மனிதர்க்கு; இனத்து, இனத்தினது; இயல்பு, தன்மை; ஆகும், ஆகும்; அறிவு, விவேகம்.

பொழி. நீரானது வேறுபட்டு (தான்சேர்ந்த) நிலத்தினது தன்மையேயாகும்; மனிதர்க்கு அறிவானது தம்முடைய இனத்தின் தன்மையேயாகும்.

78. மனத்தானா மாந்தர்க்கு குணர்ச்சி யினத்தானா
மின்னா தெனப்படுஞ் சொல்.

பத. மனத்தானா, மனத்தினாலே; ஆம், உண்டாகும்; மாந்தர்க்கு, மனிதர்க்கு; உணர்ச்சி, அறிவு; இனத்தான், இனத்தால்; ஆம், உண்டாகும்; இன்னாள், இத்தன்மையன்; எனப்படும், என்று சொல்லப்படும்; சொல், சொல்.

பொழி. மனிதருக்கு அறிவு மனத்தினாலே உண்டாகும்; இத்தன்மையன் என்று சொல் இனத்தினாலே உண்டாகும்.

79. எண்ணித் துணிக கருமம் துணிந்தபி
னெண்ணுவோ மென்ப திழுக்கு.

பத. எண்ணி, ஆலோசித்து; துணிக, தொடங்கக்கடவர்; கருமம், கருமத்தை; துணிந்தபின், தொடங்கியபின்; எண்ணுவோம், ஆலோசிப்போம்; என்பது, என்கிறது; இழுக்கு, குற்றம்.

பொழி. செய்யத்தக்க கருமத்தை ஆலோசித்துத் தொடங்கக்கடவர்; தொடங்கிய பின்பு, ஆலோசிக்கக்கடவோம் என்கிறது குற்றமாம்.

80. பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்.

பத. பெருமைக்கும், உயர்வுக்கும்; ஏனை, மற்றை; சிறுமைக்கும், இழிவுக்கும்; தத்தம், தம்தம்; கருமமே, செய்கையே, கட்டளைக்கல், உரைகல்.

பொழி. உயர்வுக்கும் இழிவுக்கும் அவரவர் செய்கையே உரைகல்.

81 தேரான் தெளிவும் தெளிந்தான்க ணேயுறவும்
தீரா விடும்பை தரும்.

பத. தேரான், ஆராயாமல்; தெளிவும், தெளிவதும்; தெளிந்தான், தெளிந்தவன்; கண், இடத்து; உறவும், சகவதிகிதலும்; தீரா, நீங்காத; இடும்பை, துன்பம்; தரும், கொடுக்கும்.

பொழி. (அரசன் ஒருவனை) ஆராயாமல் தெளிதலும், ஆராய்ந்து தெளிந்தவனிடத்து சம்பீதகிதலும், (அவனுக்குத்) தீராத துன்பத்தைக் கொடுக்கும்.

82. இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்த
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

பத. இகழ்ச்சியில், சோர்வுறலே; கெட்டாரை, கெட்டவரை; உள்ளுக, நினைக்க; தாம், தாங்கள்; தம், தமது; மகிழ்ச்சியின், மகிழ்ச்சியில்; மைந்து, வலி; உறும், படும்; போழ்து, பொழுது.

பொழி. தமது மகிழ்ச்சியில் பலப்படும்பொழுது, சோர்வி னலே கெட்டுப்போனவரை நினைக்கக்கடவர்கள்.

83. வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்த
முள்ளத் தனைய துயர்வு.

பத. வெள்ள, நீரின்; அனைய, அளவு; மலர், பூ (வின் தான்); நீட்டம, நீளம்; மாந்தர், மனிதர்; தம், தங்கள்; உள்ள, உள்ளத்து; அனையது, அளவினது; உயர்வு, உயர்ச்சி.

பொழி. நீரின் அளவேயாகும் பூத்தாளின் நீளம், மனித ருடைய ஊக்கத்தின் அளவேயாகும் அவர் உயர்ச்சி.

84. மடியை மடியா வொழுகல் குடியை
குடியாக வேண்டு பவர்.

பத. மடியை, சோம்பலை; மடியா, சோம்பலாக; ஒழுகல், நடக்கக்கடவர்; குடியை, குலத்தை; குடியாக, குலமாக; வேண்டுபவர், வேண்டுவோர்.

பொழி. (தாம்பிறந்த) குடும்பத்தைக் குடும்பமாக வேண்டு வோர், சோமபலைச் சோம்பலாகவே நினைத்து (முயற்சி யோடு) நடக்கக்கடவர்.

85. நெடுநீர் மறவி மடிதுயி லைந்தும்
கெடுநீரார் காமக் கலன்.

பத. நெடு, நீட்டிக்கும், நீர், தன்மை; மறவி, மறதி; மடி, சோம்பல்; துயில், தூக்கம்; ஐந்தும், காலும்; கெடும், இறக்கும்; நீரார், தன்மையார்; காம, விருப்ப; கலன், மரக் கலம்.

பொழி. (விரைந்து செய்வதை) நீட்டிக்கும் தன்மையும், மறதியும், சோம்பலும், தூக்கமுமாகிய இந்த மூன்றும் இறக்குந்தன்மையார் விரும்பியேறும் மரக்கலமாம்.

86. அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

பத. அருமை, அருமை; உடைத்து, உடையது; என்று, என்று; அசாவாமை, தளராதிருக்க; வேண்டும், வேண்டிய; பெருமை, பெருமையை; முயற்சி, முயற்சி; தரும், கொடுக்கும்.

பொழி. இத்தொழிலை முடித்தல் அருமையுடையதென்று தளராதிருக்க; முயற்சியானது வேண்டிய பெருமையைக் கொடுக்கும்.

87. முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்.

பத. முயற்சி, முயற்சியானது; திருவினை, திருவை; ஆக்கும், உண்டாக்கும்; முயற்றின்மை, முயற்சியில்லாமை; இன்மை, வறுமை; புகுத்திவிடும், அடைவித்துவிடும்.

பொழி. முயற்சி செல்வத்தை யுண்டாக்கும், முயற்சியில்லாமை வறுமையை அடைவித்துவிடும்.

88. இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

பத. இடுக்கண், துன்பம்; படினும், பட்டாலும்; இளி, இகழ்வு; வந்த, வந்த; செய்யார், செய்யமாட்டார்; நடுக்கு, அசைவு; அற்ற, இல்லாத; காட்சியவர், அறிவுடையவர்.

பொழி. அசைவில்லாத அறிவுள்ளவர் தன்பப்பட்டாலும், இழிவைத் தருபவைகளைச் செய்யமாட்டார்.

89. சொல்லுதல் யார்க்கு மெளிய வரிபவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்.

பத. சொல்லுதல், சொல்லுதல்; யாவர்க்கும், எவர்க்கும்; எளிய, எளியன; அரிய, அரியன; ஆம், ஆகும்; சொல்லிய; சொன்ன; வண்ணம், விதம்; செயல், செய்தல்.

பொழி. சொல்லுதல் எவர்க்கும் எளிது, சொன்னபடி செய்தல் அரிது.

90. தன்ப முறவரினுஞ் செய்க தணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை.

பத. துன்பம், இடுக்கண்; உற, மிக; வரினும், வந்தாலும்; செய்க, செய்யக்கடவர்; தணிவு, மனவலிமை; ஆற்றி, உண்டாக்கி; இன்பம், சுகத்தை; பயக்கும், தருகின்ற; வினை, தொழிலை.

பொழி. துன்பம் மிகவந்தாலும், சுகத்தைத்தரும் தொழிலை மனவலிமையாக்கிக்கொண்டு செய்யக்கடவர்.

91. அடுத்தது காட்டும் பளிங்கேபோ னெஞ்சம்
கடுத்தது காட்டு முகம்.

பத. அடுத்தது, அடுத்ததை; காட்டும், காண்பிக்கும்; பளிங்கே, கண்ணாடியே; போல், போல; நெஞ்சம், மனம்; கடுத்தது, மிகுந்தது; காட்டும், காண்பிக்கும்; முகம், முகம்.

பொழி. அடுத்ததைக் காண்பிக்கும் கண்ணாடியைப்போலவே; முகம் நெஞ்சிலே மிருந்ததைக் காண்பிக்கும்.

92. ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை பொரீஇ விடல்.

பத. ஊதியம், பேறு; என்பது, என்று சொல்லப்படுவது; ஒருவற்கு, ஒருவனுக்கு; பேதையார், அறிவில்லாதவர்; கேண்மை, நட்பு; ஒரீஇ, ஒருவி; விடல், விடுவது.

பொழி. அறிவில்லாதவருடைய நட்பை ஒழித்துவிடுவது ஒருவனுக்கு இலாபம் என்று சொல்லப்படுவது.

93. ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துத் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்.

பத. ஓதி, கற்றும்; உணர்ந்தும், அறிந்தும்; பிறர்க்கு, அந்நியருக்கு; உரைத்தும், சொல்லியும்; தான், தான், அடங்கா, அடங்காத; பேதையில், மூடனைப்போல; பேதையார், மூடர்; இல், இல்லை.

பொழி. கற்றும் உணர்ந்தும் மற்றவர்க்குப் போதித்தும், தான் அடங்காத மூடனைப்போல மூடர் இல்லை.

94. இகலிற் கெதிர்சாய்த லாக்க மதனை
மிகலூக்கி னூக்குமாங் கேடு.

பத. இகலிற்கு, மாறுபாட்டிற்கு; எதிர், எதிர்தலை; சாய்தல், ஒழிதல்; ஆக்கம், பெருக்கம்; அதனை, அதை; மிகல்

மிகுதல்; ஊக்கின், மேற்கொள்வானுயின்; ஊக்குமாம், மேற் கொள்ளுமாம்; கேடு, கேடு.

பொழி. மாறுபாட்டிற்கு எதிர்தலை ஒழிதல் பெருக்கம், அதனை மிகுதலை மேற்கொள்வானுயின் கேடு மேற்கொள் ளுமாம்.

95. உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டிணைந்த தற்று.

பத. உடம்பாடு, மனப்பொருத்தம்; இலாதவர், இல்லா தவர்; வாழ்க்கை, வாழ்தல்; குடங்கர், குடிசையுள்; பாம் போடு, நாகப்பாம்போடு; உடன், கூட; இணைந்தற்று, உறைந் ததன்மை.

பொழி. மனப்பொருத்தமில்லாதவரோடு வாழ்தல் குடி சையில் (நாகப்) பாம்போடுகூட இருந்ததன்மையாகும்.

96. பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்
செய்தொழில் வேற்றுமை யான். [வா

பத. பிறப்பு, உற்பத்தி; ஒக்கும், சமமாகும்; எல்லா, எல்லார்; உயிர்க்கும், சீவனுக்கும்; சிறப்பு, பெருமை; ஒவ் வா, பொருந்தா; செய், செய்யப்பட்ட; தொழில், கருமம்; வேற்றுமையான், வேறுபாட்டால்.

பொழி. எல்லா உயிர்க்கும் பிறப்பொக்கும், செய்யப்ப ட்ட தொழில்களின் வேறுபாட்டால் சிறப்பு ஒத்திருக்காது.

97. பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல்.

பத. பெருமை, மாட்சிமை; பெருமிதம், செருக்கு; இன்மை, இல்லாதிருத்தல்; சிறுமை, சிறுமை; பெருமிதம், செருக்கு, ஊர்ந்துவிடல், நின்றுவிடல்.

பொழி. பெருமை செருக்கில்லாதிருத்தல், சிறுமை செருக்கடைதலிலே நின்றுவிடல்.

98. நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்.

பத. நகல், மகிழல்; வல்லா, வல்லவர்; அல்லார்க்கு, அல்லாதவர்க்கு; மா, மிக; இரு, பெரிய; ஞாலம், பூமி; பகலும், பகற்காலத்திலும்; பால், தன்மை; பட்டன்று, கிடந்ததன்மை; இருள், இருட்டு.

பொழி. (பண்பினால் ஒருவரோடுங்கலந்து) மகிழமாட்டாதவர்க்கு மிகப்பெரிய பூமியானது பகற்காலத்திலும் இருளில் கிடந்த தன்மையே.

99. கருமத்தா னாணுத னாணுத் திருநுத
னல்லவர் நாணுப் பிற.

பத. கருமத்தால், தொழிலால்; நாணுதல், வெட்குதல்; நாணு, வெட்கம்; திரு, அழகிய; நுதல், நெற்றி; நல்லவர், குலமகளிர்; நாணு, வெட்கம்; பிற, மற்ற.

பொழி. இழிந்த கருமத்தால் வருவது நன்மக்களது நாணம், (அது அன்றி) மனம் மொழி மெய் என்பவற்றின் ஒழுக்கத்தால் வருவன மற்ற நாணங்கள்.

100. தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த'
துண்ணலி னூங்கினிய தில.

பத. தெள், தெளிந்த, நீர், சலம்; அடு, சமைத்த; புற்கை, கூழ்; ஆயினும், ஆயினும்; தாடந்தது, சம்பாதிக்கப்பட்டதை; உண்ணலின், உண்ணுதற்கு; ஊங்கு, மேற்பட்ட; இனியது, இன்பஞ்செய்வது; இல், வேறில்லை.

பொழி. தன் முயற்சியாற் சம்பாதிக்கப்பட்டது தெளிந்த நீர்போன்ற கூழேயாயினும், அதைப் பொசிக்கிறதற்கு மேற்பட்ட இனிமையுடையது இல்லை.

முற்றிற்று.

L. S. PRESS, MADRAS—1926